தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.08.2024 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், ஜெய்ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவர்களுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், பொங்கலூர் ஒன்றியக் குழுத்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், பல்லடம் நகர செயலாளர் நா.ராஜேந்திரகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மனோதத்துவ நிபுணர்களைக் கொண்டு

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஆக. 14- பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அரசு ஹோபார்ட் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, தாயார் சாகிப் தெரு அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி மற்றும் சைதாப்பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆகிய 3 பள்ளிகளில் VIRTUSAA நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதி ரூபாய் 1.70 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 5 கணினி ஆய்வகங்களைத் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றியதாவது:-

நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அரசு ஹோபார்ட் முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, தாயர் சாகிப் தெரு அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி மற்றும் சைதாப் பேட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆகிய 3 பள்ளிகளில் VIRTUSAA நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதி ரூபாய் 1.70 கோடி மதிப்பில் 5 கணினி ஆய்வகங்களைத் திறந்து வைத்தத்தில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கணினி ஆய்வகங்களை நிறுவுவதற்காகத் தம் பங்களிப்பை நல்கிய இந்நிறுவனத்திற்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மனோதத்துவ நிபுணர்களைக் கொண்டு புத்தாக்கப் பயிற்சி முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ளது

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது பங்களிப்பாக சொந்த நிதி ரூபாய் 5 லட்சத்தை வழங்கி நம்ம ஊரு நம்பள்ளி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக சமூகத்திற்கு நம்மால் முடிந்த பங்களிப்பை அளிக்கும் வகையில் பல்வேறு நபர்கள் அளித்த நிதி தற்போது ரூபாய் 380 கோடி சேர்ந்துள்ளது. நேர்மையான வகையில் இந்த நிதி செலவிடப்படும். நல்ல திட்டங்களுக்கு இத்தொகை செலவிடப்படும். கல்வி என்பது சமத்துவத்தை மலரச் செய்யும் ஆயுதம் என சொன்னவர் கலைஞர் அவர்கள். தற்போது கல்விக்குச் செய்யும் முதலீடு எதிர்காலத்தில் மாணவர்களிடமிருந்து நல்ல வட்டியை தரும்.

பள்ளிகளில் பயின்ற முன்னாள் மாணவர்கள் தனது பங்களிப்பை நிதியாகவும் உழைப்பாகவும் வழங்க 7.5 லட்சம் நபர்கள் விழுதுகள் திட்டத்தில் பதிவு செய்துள்ளார்கள். மாணவர்கள் நன்றாகப் படித்து, எதிர்காலத்தில் அவர்களது வாழ்க்கை நல்வாழ்க்கையாக அமைய வேண்டுமென விரும்பும் சமூகம் ஆசிரியர் சமூகம். எனவே, மாணவச் செல்வங்கள் நன்றாகப் படித்து படிக்கும் பள்ளிக்கும், பெற்றோர்க்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனப் பேசினார்.

இவ்விழாவில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், (ப.நி), பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், VIRTUSAA நிறுவனத்தின் தலைமை தொழில் நுட்ப அதிகாரி ராம் மீனாட்சி சுந்தரம், தொழில் நுட்ப சேவை வரியின் தலைவர் வெங்கடேசன் விஜயராகவன், நிர்வாகத் துணைத் தலைவர் என்.எம்.வைத்யநாதன், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா. மார்ஸ், மாவட்டக் கல்வி அலுவலர் திருமதி இரா.சி. சரஸ்வதி, ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறையில் 6 புதிய பேருந்துகள்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்தார்!

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஆக.14- மயிலாடுதுறை பேருந்து நிலையத்தில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 3 புதிய பேருந்துகள், 3 புதிய கூண்டு கட்டப்பட்ட பேருந்துகள் சேவை தொடக்க விழா மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பும்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ்., ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 3 புதிய பேருந்துகள், 3 புதிய கூண்டு கட்டப்பட்ட பேருந்துகள் சேவையை சுற்றுச் சூழல் மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கொடி அசைத்து தொடங்கி வைத்து பேசுகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம், நாகை மண்லத்தில் உள்ள 11 பணிமனைகள் மூலம் 541 பேருந்துகளை இயக்கி மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்ட பொதுமக்களக்கு சேவை செய்து வருகிறது. மயிலாடுதறை, சீர்காழி மற்றம் பொறையார் ஆகிய நான்கு பணிமனைகளை உள்ளடக்கிய மயிலாடுதுறை மாவட்டத்தில் நாளொன்றுக்கு 72 புறநகர் பேருந்துகள், 65 நகர பேருந்துகள் மலம் 55,796 கி.மீ. இயக்கப்பட்டுவதில் 1,18,341 பயணிகள் பயனடைந்து வருகின்றனர். இதில் 57,152 மகளிர் பயணிகளும், 174 மாற்றுத்திறனாளி பயணிகளம், 3 மாற்றுத்திறனாளி உதவியாளர் பயணிகளும், 15 திருநங்கை பயணிகளம் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கட்டணமின்றி பயணித்து வருகின்றனர். மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட மூன்று பணிமனைகளுக்கும் புதிய மற்றும் கூண்டு புணரமைக்கப்பட்ட 21 பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 15 பேருந்துகள் வழங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 6 புதிய பேருந்துகளின் சேவைகள் பொதுமக்கள் போரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் விரைவில் புதிய வழித்தடங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேருந்துகளை தொடங்கி வைக்க உள்ளார்கள். தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களை பெறுகின்ற பொதுமக்கள் அரசுக்கு நல் ஆதரவு வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், பொதுக் குழு உறுப்பினர் பி.சிவதாஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான.இமையநாதன், பஞ்சுகுமார், எம். அப்துல்மாலிக், ஏ.ஆர். ராஜா, மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ப.முருகமணி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரராஜசேகர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே. மருது, சௌமியன், அரசு போக்குவரத்துக் கழக நாகை மண்டல பொதுமேலாளர் எஸ்.ராஜா, துணை மேலாளர்கள் சிதம்பரகுமார், ராமமூர்த்தி, கிளை மேலாளர் வடிவேல், கும்பகோணம் கோட்ட அரசு போக்குவரத்துக் கழக செய்தி மக்கள் தொடர்வு அலுவலர் க.பாண்டியன், மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் வை.தெய்வநாயகம், ஆர்.கே.சங்கர், மலக்கோயில் பிரபாகர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதல்வரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வளையாம்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெறும் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் வாணியம்பாடி வட்டாட்சியர் சிவபிரகாசம், ஆலங்காயம் ஒன்றியக்குழுத் தலைவர் சங்கிதாபாரி மற்றும் ஊராட்சிமன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

புதுக்கோட்டையில் சமத்துவபுரம் கட்டுவதற்கான கட்டுமானப் பணி துவக்கம்!

புதுக்கோட்டை, ஆக. 14– புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கடையக்குடி ஊராட்சியில், ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரம் கட்டுவதற்கான பணியினை சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா, தலைமையில் (05.08.2024) அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

இதில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஜஸ்வர்யா, அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

‘திராவிட மாடல்’ தித்திக்கும் திட்டங்கள்!

கலைஞரின் புதல்வரால் விளைந்த தமிழ்ப்புதல்வன் திட்டம்.
மக்கள் முதல்வரால் துளிர்ந்த புதுமைப்பெண் திட்டம்.
மங்கையருக்குச் சம உரிமை கண்ட கலைஞரின்
கனவு நிலைக்க மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

பெண்கள் தம் பயணத்திற்குப் பயனுள்ள
கட்டணம் இல்லா பேருந்து திட்டம்
சிறுவர் தம் சிறப்பிற்கு முதல்வரின் காலைச்சிற்றுண்டித் திட்டம்
மாணவர் தம் மேம்பாட்டிற்கு நான் முதல்வன் திட்டம்

பாரதத்திற்கே தமிழகத் திட்டங்கள் ஒரு முன்னோடி
மக்களின் இதயமே இதைப் பறைசாற்றும் கண்ணாடி
எதிர்கால உதயத்திற்கு இத்திட்டங்கள் ஒரு முன்னோட்டம்
அனைவருக்கும் அனைத்தும் என்பதே திராவிட மாடல் கண்ட சமத்துவத் தோட்டம்.

ஒய்வில்லாது உழைத்தவரின் ஒப்பற்ற திருமகனே
தமிழக மக்களின் நலத்திற்கு உழைத்திடும் தமிழ் மகனே
இது சொன்னதை செய்யும், செய்வதை சொல்லும் நல்லாட்சி
இதற்கு நாடாளுமன்றத்தின் நாற்பதுக்கு நாற்பதே சாட்சி.

- மருத்துவர் கமல் காந்தன் சவுதி அரேபியா.
(தியாகி திரு. லட்சுமி காந்தன் பாரதி IAS [ஓய்வு) அவர்களின் பேரன்),

தென்காசியைச் சேர்ந்த

மாற்றுக்கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில்!

தென்காசி, ஆக.14- முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டும்,கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாட்டால் ஈர்க்கப்பட்டு தென்காசி, செங்கோட்டை, இலஞ்சி பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் 30 பேர் சுரண்டையில் உள்ள கலைஞர் அவர்களின் நினைவாலயத்தில் வைத்து தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

தென்காசி தெற்கு மாவட்டம் சுரண்டையில் கழக தொண்டர்கள் உழைப்புடன் சென்னை மெரினா கடற்கரையில் கலைஞர் அவர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவாலயம் போன்று சுரண்டையில் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து அங்கு நலத்திட்ட உதவிகளை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கி வருகிறார்.

இந்நிலையில் சுரண்டையில் உள்ள கலைஞர் அவர்கள் நினைவாலயத் தில் வைத்து தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னிலையில் தென்காசி, செங்கோட்டை,இலஞ்சி பகுதிகளை சேர்ந்த இளைஞர்கள் 30 பேர்கள் தினேஷ் தலைமையில் கழகத்தில் இணையும் நிகழ்வு நடைபெற்றது.

அவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வரவேற்று கழக வண்ண வேட்டியை வழங்கினார்.தொடர்ந்து அவர் பேசுகையில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியால் பெண்கள், மாணவர்கள், நடுநிலையாளர்களிடம் தி.மு.க.வின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் நாடும் நமதே 40 நமதே என்ற தலைவர் அவர்களின் பொன்மொழி வார்த்தையின்படி புதுச்சேரி உள்பட 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளோம். கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது, முதல் தமிழக இளைஞர்கள் அதிக அளவில் விளையாட்டு துறையில் சாதித்து வருகின்றனர். அவரது செயல்பாட்டாலும் அவர் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாகவும் அதிக அளவில் ஈர்க்கப்பட்டு இளைஞர்கள் கழகத்தில் தங்களை இணைத்து வருகின்றனர் என்று கூறினார்.

நிகழ்வில் சுரண்டை நகர பொருளாளர் கூட்டுறவு கணேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா,ஆதிதிராவிடர் அணி தலைவர் சங்கர நயினார், அயலக அணி முத்து சுப்பிரமணியன், ஜோதிட தங்க இசக்கி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

தொடர் விடுமுறையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

சென்னை, ஆக. 14- அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சுதந்திர தினம் மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு இன்று (புதன் கிழமை) சென்னையில் இருந்தும் மற்றும்

பிற இடங்களில் இருந்தும் தினமும் இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி,

தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று 470 பஸ்களும், வெள்ளி மற்றும் சனிக்கிழமை 365 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒகூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை 70 பஸ்களும், வெள்ளிக் கிழமை மற்றும் சனிக்கிழமை 65 பஸ்களும் இயக்கப்பட உள்ளன.

பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய இடங்களில் இருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பஸ்களும், மாதவரத்தில் இருந்து புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமை ஆகிய நாள்களில் 20 சிறப்பு பஸ்கள் என ஆக மொத்தம் 1190 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

மேலும், வருகிற 18 ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

திருப்புவனம் ஒன்றியம். கீழடியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 12.00 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையை ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடசுப்பிரமணியன் தலைமையில், ஒன்றிய கவுன்சிலர் வைத்தீஸ்வரி ஆறுமுகம் முன்னிலையில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் திறந்து வைத்தார். உடன் திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சின்னையா, திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கைமாறன், ஊராட்சி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் மூர்த்தி, கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் கடம்பசாமி. நகர செயலாளர் நாகூர்கனி, வட்டார வளர்ச்சி அலுவலர் அருள்பிரகாசம், பேரூராட்சித் துணைத் தலைவர் ரகமத்துல்லா கான், ஒன்றிய கவுன்சிலர் ஈஸ்வரன், சுப்பையா, ஊராட்சி மன்ற தலைவர்கள் மச்சக்காளை ரேவதிசக்தி முருகன், ரவி, சுப்பிரமணியன், இளைஞர் அணி தேவதாஸ், விவசாய அணி சேகர்,சங்கர், நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.